**முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், விழுப்புரம்**

**முன்னிலை : திரு. A. தமிழ்செல்வன், எம்.எல்.,**

**முதலாவது கூடுதல் சார்பு நீதிபதி, விழுப்புரம்**

**2024ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 25ம் நாள் புதன்கிழமை**

**IA.374/2023**
**in**
**OS.844/2019**
**(CNR.NO.TNVP02-001862-2019)**

அம்பிகா .... மனுதாரர்/வாதி

/எதிர்/

துரைமணி .... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

**IA.375/2023**
**in**
**OS.844/2019**

அம்பிகா .... மனுதாரர்/வாதி

/எதிர்/

துரைமணி .... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனுக்கள் 08.11.2023 அன்று தாக்கல் செய்யப்பட்டு 08.11.2023 அன்று கோப்புக்கு எடுக்கப்பட்டு கடந்த 21.09.2024 அன்று என் முன்பு இறுதியாக விசாரணைக்காக வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T.பிரபாகரன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த

வழக்கறிஞர் திரு.N.ஆதித்த கரிகாலன் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலினை செய்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**<u>உத்தரவு</u>**

**IA.374/2023**

மனுதாரர்/வாதியால் இம்மனு சி.பி.சி. பிரிவு 151-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டு அதில் அசல் வழக்கில் மனுதாரர்/வாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சியான (PW1)-ஐ மீண்டும் அழைத்து விசாரணை செய்து கொள்ள அனுமதி அளிக்க மனு தாக்கல் செய்துள்ளதால் மேற்படி வழக்கில் மனுதாரர்/வாதி தரப்பு Reopen செய்து மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உத்தரவிட வேண்டி பரிகாரம் வேண்டப்பட்டுள்ளது.

**IA.375/2023**

மனுதாரர்/வாதியால் இம்மனு சி.பி.சி. ஆர்டர் 18 விதி 17 சி.பி.சி-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டு அதில் அசல் வழக்கில் மனுதாரர்/வாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சியான (PW1) ஆன தன்னை மீண்டும் அழைத்து விசாரித்துக் கொள்ள அனுமதி அளிக்க உத்தரவிட பரிகாரம் வேண்டப்பட்டுள்ளது.

**<u>2. ஐ.ஏ.374/2023 மனு மற்றும் அபிடவிட்டின் சுருக்கம் பின்வருமாறு :-</u>**

மனுதாரர் தரப்பில் தான் மேற்படி வழக்கில் வாதி என்றும் இம்மனுவில் மனுதாரர் என்றும் மேற்படி வழக்கில் 10.01.2014 அன்று பிரதிவாதி தன்னிடம் ரூ. 2,00,000/- பெற்றுக்கொண்டு மேற்படி தொகைக்கு மாதம் 1க்கு ரூ.100/-க்கு

ரூ.1.00/- வீதம் கூடிய அசல் வட்டித் தொகையை தான் வேண்டும்போது தன்னிடமாவது அல்லது தன் உத்தரவு பெற்றவரிடமாவது கொடுத்து பைசல் செய்வதாய் சம்மதித்து தாவா பிராம்சரி நோட்டை விழுப்புரத்தில் எழுதிக் கொடுத்துள்ளார் என்றும் மேற்படி பிராம்சரி நோட்டை தன் கைப்பட எழுதிக் கொடுத்து பிராம்சரி நோட்டில் ரெவின்யூ ஸ்டாம்ப் மீது கையெழுத்தும் அதன் கீழ் கையெழுத்தும் செய்தார் என்றும் மேற்படி பிராம்சரி நோட்டு கடன் பெறுவதற்கு முன்னதாக பிரதிவாதி தன்னிடம் 14.01.2013 அன்று ரூ.2,00,000/- பெற்றுக்கொண்டு மேற்படி தொகைக்கு மாதம் 1க்கு ரூ.100/-க்கு ரூ.1.00/- வீதம் கூடிய அசல் வட்டித் தொகையை தான் வேண்டும் போது தன்னிடமாவது அல்லது தன் உத்திரவு பெற்றவரிடமாவது கொடுத்து பைசல் செய்வதாய் சம்மதித்து தாவா பிராம்சரி நோட்டை விழுப்புரத்தில் எழுதிக் கொடுத்துள்ளார் என்றும் மேற்படி பிராம்சரி நோட்டினை தன் கைப்பட எழுதிக்கொடுத்துள்ளார் என்றும் மேலும் 10.01.2014ல் எழுதிக்கொடுத்த தாவா பிராம்சரி நோட்டுக்கு வட்டிக்காக 02.12.2016 அன்று ரூ.1000/- வரவு வைத்து வரவு எழுதியது உட்பட என பிரதிவாதி பிராம்சரி நோட்டில் வரவு வைத்து கையெழுத்து செய்துகொடுத்துள்ளார் என்றும் மேலும் 14.01.2013 தேதியிட்ட பிராம்சரி நோட்டுக்காக 06.01.2016 தேதியில் ரூ.1000/- தன் கைப்பட வரவு வைத்து வரவு எழுதியது உட்பட என பிரதிவாதி வரவு வைத்து கையெழுத்து செய்துள்ளார் என்றும் மேற்படி பிராம்சரி நோட்டுகளுக்காக மேற்படி வரவுகளை தவிர வேறு வரவுகள் ஏதும் இல்லை என்றும் மேலும் தான் இந்த வழக்கு பிராம்சரி நோட்டிற்காக 30.07.2018 தேதியில் அறிவிப்பு அனுப்பியதாகவும் மேற்படி அறிவிப்பை 01.08.2018ல் பிரதிவாதி பெற்றுக்கொண்டார் என்றும் உண்மைக்கு புறம்பான அம்சங்களை தெரிவித்து 11.10.2018 தேதியில் பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றும் மேற்படி பதில் அறிவிப்பில் கண்டுள்ள அம்சங்களை தான் குறிப்பாகவும் திட்டவட்டமாகவும் மறுதளிக்கிறார் என்றும்

தன்னிடம் கடந்த 10.01.2024-ல் ரூ.2,00,000/- பெற்றுக்கொண்டு அதற்கு ஆண்டிற்கு 12 சதவீத வட்டியுடன் திருப்பி கொடுப்பதாக ஒப்புக்கொண்டு ஒரு பிராம்சரி நோட்டை எழுதி கொடுக்கவில்லை எனவும், அதில் கடந்த 02.12.2016ல் ரூ.1000/- வட்டியாக வரவு வைக்கவில்லை என தனது ஆட்சேபணையில் தெரிவித்துள்ளது உண்மைக்கு புறம்பானது என்றும் தன்னிடம் பிரதிவாதி கடந்த 14.01.2013ல் ரூ.2,00,000/- பெற்றுக்கொண்டு அதற்கு ஆண்டிற்கு 12 சதவீத வட்டியுடன் திருப்பி கொடுப்பதாக ஒப்புக்கொண்டு மேலும் ஒரு பிராம்சரி நோட்டை எழுதி கொடுத்து அதில் கடந்த 06.01.2016ல் ரூ.1000/- வட்டியாக வரவு வைத்துள்ளதாக பொய்யான ஆவணத்தை தயார் செய்துள்ளார் என கூறுவது பிரதிவாதியால் தனது கடனை ஏமாற்ற வேண்டும் என கூறப்பட்ட அம்சமாகும் என்றும் மேலும் எதிர்மனுதாரர்/பிரதிவாதி உண்மைக்கு புறம்பான அம்சங்களை தெரிவித்து எதிர்வழக்காடி வருகிறார் என்றும் பிராம்சரி நோட்டில் ஆங்கிலத்தில் கையெழுத்து செய்துவிட்டு நீதிமன்றத்தில் தமிழில் கையெழுத்து செய்து வருகிறார் என்றும் மேலும் தன் பேருக்கு பிராம்சரி நோட்டை எழுதிக்கொடுப்பதற்கு முன்பு 20.09.2013 தேதியில் ரமேஷ் என்பவருக்கு, பிரதிவாதி அவருக்கு பாத்தியமான சொத்தை கிரையம் கொடுத்து மேற்படி ஆவணம் திருக்கனூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.2236/13 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் மேற்படி வழக்கில் மேற்படி ஆவணத்தை சமூகம் நீதிமன்றத்தார் பரிசீலனை செய்யும் பட்சத்தில் உண்மை நிலை தெரியவரும் என்றும் மேலும் 14.11.2019 தேதியில் அனிதா அவர்களுக்கு பிரதிவாதி துரைமணி, கார்த்திகேயன், சிவமூர்த்தி மற்றும் மணி ஆகியோர் பாக உரிமை விடுதலை பத்திரம் ஏற்படுத்தி மேற்படி ஆவணம் 24269/2019 ஆக பதிவாகியுள்ளது என்றும் மேலும் 10.09.2013 அன்று ஸ்ரீராம் சிட்டி யூனியன் பைனான்ஸ் லிமிட் பிரதிவாதி துரைமணி அடமானம் பைசல் எழுதிக்கொடுத்து மேற்படி ஆவணம் திருக்கனூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் 2103/2013 ஆக

பதிவாகியுள்ளது என்றும் மேலும் தன் கணவர் விழுப்புரம் முதன்மை சார்பு நீதிமன்றத்தில் ஓ.எஸ்.639/2017 என்ற வழக்கை சந்திரசேகர் மற்றும் பிரதிவாதி துரைமணி பெயரில் தாக்கல் செய்து டிகிரி பெற்று நடவடிக்கை எடுத்தார் என்றும் அது சம்மந்தமான நிறைவேற்று மனு மற்றும் உத்தரவின் நகலை தாக்கல் செய்கிறார் என்றும் மேற்படி ஆவணங்கள் மிக முக்கியமான ஆவணங்களாகும் என்றும் பிரதிவாதி உண்மைக்கு புறம்பானது எதிர்கட்டி செய்து வருகிறார் என்பது பொருத்து நிரூபிக்க மேற்படி ஆவணங்கள் தன் தரப்பிற்கு முக்கிய ஆவணங்களாகும் என்றும் மேற்படி வழக்கில் தீர்ப்பிற்காக வழக்கு 09.11.2023 அன்று வைக்கப்பட்டுள்ளதால் மேற்படி வழக்கில் அசல் வழக்கை Reopen செய்துகொள்ள இம்மனுவை தாக்கல் செய்கிறார் என்றும் தான் வேண்டுமென்றே உரிய காலத்தில் மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்யால் இல்லை என்றும் மேற்படி ஆவணங்கள் தெய்வாதீனமாக தாக்கல் செய்யாமல் விடுபட்டுவிட்டது என்றும் மேலும் தன் தரப்பினை Reopen செய்துகொள்ளாவிட்டால் தனக்கு பெருத்த கஷ்ட நஷ்டம் சம்பவிக்கும் என்றும் பின்னிட்டு வேறுவகையில் ஈடு செய்து கொள்ள இயலாமல் போய்விடும் என்றும் மேற்படி ஆவணங்களில் உள்ள கையெழுத்துகள் மற்றும் பிராம்சரி நோட்டில் உள்ள கையெழுத்துக்களை பரிசீலனை செய்யும் பட்சத்தில் உண்மை நிலை சமூகம் நீதிமன்றத்தார் அவர்களுக்கு தெரியவரும் என்றும் மேற்படி வழக்கில் வாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட வாதியை (PW1) மீண்டும் அழைத்து விசாரணை செய்து கொள்ள அனுமதியளிக்க மனு தாக்கல் செய்துள்ளதால் மேற்படி வழக்கில் ஆவணங்களை தாக்கல் செய்து கூடுதல் பிரமாணவாக்குமூலம் தாக்கல் செய்யும் பொருட்டு தன் தரப்பை Re-open செய்து மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் ஆகவே சமூகம்கோர்ட்டார் அவர்கள் தயவு செய்து மேற்படி வழக்கில் தன் தரப்பை Reopen செய்து மீண்டும் விசாரணைக்கு

எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் மனு மற்றும் அபிடவிட்டில் கூறப்பட்டுள்ளது.

**3. ஐ.ஏ.375/2023 மனு மற்றும் அபிடவிட்டின் சுருக்கம் பின்வருமாறு :-**

மனுதாரர் தரப்பில் தான் மேற்படி வழக்கில் வாதி என்றும் இம்மனுவில் மனுதாரர் என்றும் மேற்படி வழக்கில் 10.01.2014 அன்று பிரதிவாதி தன்னிடம் ரூ. 2,00,000/- பெற்றுக்கொண்டு மேற்படி தொகைக்கு மாதம் 1க்கு ரூ.100/-க்கு ரூ.1.00/- வீதம் கூடிய அசல் வட்டித் தொகையை தான் வேண்டும்போது தன்னிடமாவது அல்லது தன் உத்தரவு பெற்றவரிடமாவது கொடுத்து பைசல் செய்வதாய் சம்மதித்து தாவா பிராம்சரி நோட்டை விழுப்புரத்தில் எழுதிக் கொடுத்துள்ளார் என்றும் மேற்படி பிராம்சரி நோட்டை தன் கைப்பட எழுதிக் கொடுத்து பிராம்சரி நோட்டில் ரெவின்யூ ஸ்டாம்ப் மீது கையெழுத்தும் அதன் கீழ் கையெழுத்தும் செய்தார் என்றும் மேற்படி பிராம்சரி நோட்டு கடன் பெறுவதற்கு முன்னதாக பிரதிவாதி தன்னிடம் 14.01.2013 அன்று ரூ.2,00,000/- பெற்றுக்கொண்டு மேற்படி தொகைக்கு மாதம் 1க்கு ரூ.100/-க்கு ரூ.1.00/- வீதம் கூடிய அசல் வட்டித் தொகையை தான் வேண்டும் போது தன்னிடமாவது அல்லது தன் உத்திரவு பெற்றவரிடமாவது கொடுத்து பைசல் செய்வதாய் சம்மதித்து தாவா பிராம்சரி நோட்டை விழுப்புரத்தில் எழுதிக் கொடுத்துள்ளார் என்றும் மேற்படி பிராம்சரி நோட்டினை தன் கைப்பட எழுதிக்கொடுத்துள்ளார் என்றும் மேலும் 10.01.2014ல் எழுதிக்கொடுத்த தாவா பிராம்சரி நோட்டுக்கு வட்டிக்காக 02.12.2016 அன்று ரூ.1000/- வரவு வைத்து வரவு எழுதியது உட்பட என பிரதிவாதி பிராம்சரி நோட்டில் வரவு வைத்து கையெழுத்து செய்துகொடுத்துள்ளார் என்றும் மேலும் 14.01.2013 தேதியிட்ட பிராம்சரி நோட்டுக்காக 06.01.2016 தேதியில் ரூ.1000/- தன் கைப்பட வரவு வைத்து வரவு

எழுதியது உட்பட என பிரதிவாதி வரவு வைத்து கையெழுத்து செய்துள்ளார் என்றும் மேற்படி பிராம்சரி நோட்டுகளுக்காக மேற்படி வரவுகளை தவிர வேறு வரவுகள் ஏதும் இல்லை என்றும் மேலும் தான் இந்த வழக்கு பிராம்சரி நோட்டிற்காக 30.07.2018 தேதியில் அறிவிப்பு அனுப்பியதாகவும் மேற்படி அறிவிப்பை 01.08.2018ல் பிரதிவாதி பெற்றுக்கொண்டார் என்றும் உண்மைக்கு புறம்பான அம்சங்களை தெரிவித்து 11.10.2018 தேதியில் பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றும் மேற்படி பதில் அறிவிப்பில் கண்டுள்ள அம்சங்களை தான் குறிப்பாகவும் திட்டவட்டமாகவும் மறுதளிக்கிறார் என்றும் தன்னிடம் கடந்த 10.01.2024-ல் ரூ.2,00,000/- பெற்றுக்கொண்டு அதற்கு ஆண்டிற்கு 12 சதவீத வட்டியுடன் திருப்பி கொடுப்பதாக ஒப்புக்கொண்டு ஒரு பிராம்சரி நோட்டை எழுதி கொடுக்கவில்லை எனவும், அதில் கடந்த 02.12.2016ல் ரூ.1000/- வட்டியாக வரவு வைக்கவில்லை என தனது ஆட்சேபணையில் தெரிவித்துள்ளது உண்மைக்கு புறம்பானது என்றும் தன்னிடம் பிரதிவாதி கடந்த 14.01.2013ல் ரூ.2,00,000/- பெற்றுக்கொண்டு அதற்கு ஆண்டிற்கு 12 சதவீத வட்டியுடன் திருப்பி கொடுப்பதாக ஒப்புக்கொண்டு மேலும் ஒரு பிராம்சரி நோட்டை எழுதி கொடுத்து அதில் கடந்த 06.01.2016ல் ரூ.1000/- வட்டியாக வரவு வைத்துள்ளதாக பொய்யான ஆவணத்தை தயார் செய்துள்ளார் என கூறுவது பிரதிவாதியால் தனது கடனை ஏமாற்ற வேண்டும் என கூறப்பட்ட அம்சமாகும் என்றும் மேலும் எதிர்மனுதாரர்/பிரதிவாதி உண்மைக்கு புறம்பான அம்சங்களை தெரிவித்து எதிர்வழக்காடி வருகிறார் என்றும் பிராம்சரி நோட்டில் ஆங்கிலத்தில் கையெழுத்து செய்துவிட்டு நீதிமன்றத்தில் தமிழில் கையெழுத்து செய்து வருகிறார் என்றும் மேலும் தன் பேருக்கு பிராம்சரி நோட்டை எழுதிக்கொடுப்பதற்கு முன்பு 20.09.2013 தேதியில் ரமேஷ் என்பவருக்கு, பிரதிவாதி அவருக்கு பாத்தியமான சொத்தை கிரையம் கொடுத்து மேற்படி ஆவணம் திருக்கனூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.2236/13 ஆக

பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் மேற்படி வழக்கில் மேற்படி ஆவணத்தை சமூகம் நீதிமன்றத்தார் பரிசீலனை செய்யும் பட்சத்தில் உண்மை நிலை தெரியவரும் என்றும் மேலும் 14.11.2019 தேதியில் அனிதா அவர்களுக்கு பிரதிவாதி துரைமணி, கார்த்திகேயன், சிவமூர்த்தி மற்றும் மணி ஆகியோர் பாக உரிமை விடுதலை பத்திரம் ஏற்படுத்தி மேற்படி ஆவணம் 24269/2019 ஆக பதிவாகியுள்ளது என்றும் மேலும் 10.09.2013 அன்று ஸ்ரீராம் சிட்டி யூனியன் பைனான்ஸ் லிமிட் பிரதிவாதி துரைமணி அடமானம் பைசல் எழுதிக்கொடுத்து மேற்படி ஆவணம் திருக்கனூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் 2103/2013 ஆக பதிவாகியுள்ளது என்றும் மேலும் தன் கணவர் விழுப்புரம் முதன்மை சார்பு நீதிமன்றத்தில் ஓ.எஸ்.639/2017 என்ற வழக்கை சந்திரசேகர் மற்றும் பிரதிவாதி துரைமணி பெயரில் தாக்கல் செய்து டிகிரி பெற்று நடவடிக்கை எடுத்தார் என்றும் அது சம்மந்தமான நிறைவேற்று மனு மற்றும் உத்தரவின் நகலை தாக்கல் செய்கிறார் என்றும் மேற்படி ஆவணங்கள் மிக முக்கியமான ஆவணங்களாகும் என்றும் பிரதிவாதி உண்மைக்கு புறம்பானது எதிர்கட்டி செய்து வருகிறார் என்பது பொருத்து நிரூபிக்க மேற்படி ஆவணங்கள் தன் தரப்பிற்கு முக்கிய ஆவணங்களாகும் என்றும் மேற்படி வழக்கில் தீர்ப்பிற்காக வழக்கு 09.11.2023 அன்று வைக்கப்பட்டுள்ளதால் மேற்படி வழக்கில் அசல் வழக்கை Reopen செய்துகொள்ள மனு தாக்கல் செய்துள்ளதாகவும் மேலம் தான் செய்துள்ள ஆவணங்களை தன் தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்துகொள்ளும் பொருட்டு தன்னை மீண்டும் அழைத்து விசாரணை செய்துகொள்ள அனுமதி அளிக்க வேண்டும் என்றும் இல்லையேல் தனக்கு பெருத்த கஷ்ட நஷ்டம் சம்பவிக்கும் என்றும் பின்னிட்டு வேறுவகையில் ஈடு செய்து கொள்ள இயலாமல் போய்விடும் என்றும் மேற்படி ஆவணங்களில் உள்ள கையெழுத்துகள் மற்றும் பிராம்சரி நோட்டில் உள்ள கையெழுத்துக்களை

பரிசீலனை செய்யும் பட்சத்தில் உண்மை நிலை சமூகம் நீதிமன்றத்தார் அவர்களுக்கு தெரியவரும் என்றும் மேற்படி வழக்கில் வாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட வாதியை PW1 ஆன தன்னை மீண்டும் அழைத்து விசாரணை செய்துகொள்ள அனுமதியளிக்க வேண்டும் என்றும் இல்லையேல் தனக்கு பெருத்த நஷ்ட கஷ்டம் சம்பவிக்கும் என்றும் ஆகவே சமூகம்கோர்ட்டார் அவர்கள் தயவு செய்து மேற்படி வழக்கில் தன் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சியான (PW1) ஆன தன்னை மீண்டும் அழைத்து விசாரித்துகொள்ள அனுமதி அளிக்க வேண்டும் என்றும் மனு மற்றும் அபிடவிட்டில் கூறப்பட்டுள்ளது.

**<u>4. ஐ.ஏ.374/2023 மனு ஆட்சேபணையின் சுருக்கம் பின்வருமாறு :-</u>**

மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவானது அற்பமானது, நல்லெண்ணத்துடன் தாக்கல் செய்யப்பட்டது அல்ல, இது தள்ளுபடிக்கு லாயக்கானது. மனுதாரர் வழக்கினை காலம் கடத்தவே இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தாக்கல் செய்துள்ள பிரமாணப்பத்திரிக்கையில் போதுமான மற்றும் செல்லத்தக்க காரணங்கள் சொல்லப்படவில்லை. இதற்கு முன்பாகவே மனுதாரர் ஐ.ஏ.51/2023 மற்றும் ஐ.ஏ.52/2023 ஆகிய மனுக்களை திறவு செய்து வா.சா.1 சாட்சியை மீண்டும் அழைக்க 06.01.2023 மனு தாக்கல் செய்திருந்தார். அந்த மனுக்கள் 06.01.2023 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது. இரு தரப்பு வாதம் முடிந்த பிறகு வேண்டும் என்றே வழக்கினை திறவு செய்யவும் வா.சா.1ஐ திரும்ப அழைக்கவும் தாக்கல் செய்துள்ள இந்த மனுக்களானது நிலைக்கத்தக்கதல்ல. வாதி தரப்பு சாட்சி 16.11.2022 அன்று முடிவடைந்து 25.11.2022 அன்று வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டது. மீண்டும் பிரதிவாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டு வாதி தரப்பு பதில் வாதம் கேட்டு 31.10.2023 தேதிக்கு தீர்ப்புக்காக

வைக்கப்பட்ருந்தது. அந்த தருணத்தில் மனுதாரர்/வாதி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர்/வாதியின் நோக்கமானது பிரதிவாதியை அலைக்கழிப்பிற்கு உள்ளாக்கி மனஉளைச்சலை ஏற்படுத்துவதுதான். வழக்கினை திறவு செய்வதற்கு செல்லத்தக்க காரணங்கள் வாதி தரப்பில் சொல்லப்படவில்லை. ஆகவே, தீர்ப்புக்காக வைக்கப்பட்டிருந்த வழக்கில் விடுப்பட்டவைகளை நிரப்புவதற்காக தாக்கல் செய்துள்ள இந்த மனுவானது அனுமதிக்கத்தக்கதல்ல, ஆகவே தள்ளுபடி செய்யத்தக்கது.

**5. ஐ.ஏ.375/2023 மனு ஆட்சேபனையின் சுருக்கம் பின்வருமாறு :-**

எதிர்மனுதாரர்/பிரதிவாதி ஐ.ஏ.374/2023ன் ஆட்சேபணையை ஐ.ஏ.375/2023 மனுவிற்கும் ஆட்சேபணையாக அடாப் செய்கிறார்.

6. இரு தரப்பில் எவ்வித சாட்சிய சான்றாவணங்களும் விசாரித்து குறியிடப்படவில்லை. இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டு வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

**7. தீர்மானிக்கப்பட வேண்டிய விஷயம் :-**

இந்த மனுக்கள் அனுமதிக்கத்தக்கதா அல்லது இல்லையா ?

**8. தீர்வு :-**

மனுதாரர் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் தன்னுடைய வாதத்தில், மனுதாரர்/வாதி பிராமிசரி நோட் பேரில் பிரதிவாதியிடம் இருந்து பணத்தை வசூல் செய்வதற்காக அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார். பிராமிசரி

நோட்டில் ஆங்கிலத்தில் கையெழுத்து செய்துள்ள பிரதிவாதி நீதிமன்றத்தில் தமிழில் கையெழுத்து போட்டுள்ளார். பிரதிவாதி ஆங்கிலத்தில் போடும் கையெழுத்தினை நிரூபிப்பதற்காக பிராமிசரி நோட் எழுதிக்கொடுப்பதற்கு முன்பாக 20.09.2013 தேதியில் ரமேஷ் என்பவருக்கு கிரையம் கொடுத்துள்ளார். அந்த கிரையப் பத்திரம் ஆவண எண்.236/2013 ஆக திருக்கனூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த ஆவணத்தை பதிவு பரிசீலனை செய்வதன் மூலம் பிரதிவாதி முன்னுக்கு பின் முரணாக சொல்கிறார் என்பது தெரியவரும். மேலும் 14.11.2019 தேதியில் அனிதா என்பவருக்கு விடுதலை பத்திரம் ஆவண எண்.24269/2019 ஆக பதிவாகியுள்ளது. அதே போல் 10.09.2013 அன்று ஸ்ரீராம் சிட்டி யூனியன் பைனான்ஸ் லிமிட்-ல்பிரதிவாதி அடைமானம் பைசல் செய்து எழுதிக்கொடுத்துள்ளார். அது திருக்கனூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் 2103/2013 ஆக பதிவாகியுள்ளது. மேலும் வாதியின் கணவர் விழுப்புரம் முதன்மை சார்பு நீதிமன்றத்தில் ஓ.எஸ்.639/2017 என்ற வழக்கை சந்திரசேகர் மற்றும் பிரதிவாதி துரைமணி ஆகியோர்கள் பெயரில் தாக்கல் செய்து தீர்ப்பாணை பெற்று நிறைவேற்று மனு தாக்கல் செய்துள்ளார். ஆகவே, மேற்படி ஆவணங்களை இந்த வழக்கில் சான்றாவணங்களாக தாக்கல் செய்யவும் அதனை வாதி தரப்பில் குறியீடு செய்யவும் மூடப்பட்ட வாதி தரப்பு வழக்கை திறவு செய்து வா.சா.1ஐ திரும்ப அழைக்க வேண்டியது அவசியமாகிறது. ஆகவே, மனு அனுமதிக்கப்பட வேண்டும் என்று வாதிட்டார்.

9. எதிர்மனுதாரர் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் தன்னுடைய வாதத்தில் வாதி வழக்கு தாக்கல் செய்து அவரது தரப்பு சாட்சியம் அளிப்பதற்கு முன்பாக பிரதிவாதி அவரது எதிர்வழக்குரையை தாக்கல் செய்து அவரது எதிர்வாதத்தை முன் வைத்திருந்தபோதும் மனுதாரர்/வாதி அந்த

ஆவணங்களை சேகரித்து அவரது தரப்பில் சாட்சியமாக விசாரிக்கப்பட்டபோது விசாரிக்காமல் விட்டுவிட்டு தற்போது பிரதிவாதி தரப்பு சாட்சியங்கள் முடிந்த பிறகு ஏற்பட்டுள்ள இடைவெளியை நிறப்புவதற்காக அந்த ஆவணங்களை தாக்கல் செய்வது சட்டப்படி ஏற்புடையது அல்ல. பிரதிவாதியை அலைக்கழிக்கவும் வழக்கினை காலதாமதத்தப்படுத்தவும் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனுவானது தள்ளுபடி செய்யத்தக்கது என்றும் வாதிட்டார்.

10. இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டடு வழக்கு ஆவணங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டது.

11. வாதி தரப்பில் பிராமிசரி நோட்டின் பேரில் பிரதிவாதியிடம் இருந்து தொகை பெறுவதற்கு அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 பிராமிசரி நோட்டில் ஆங்கிலத்தில் கையெழுத்திடப்பட்டுள்ளது. பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை அவரது சாட்சியம் வக்காலத்து போன்றவைகளில் பிரதிவாதி தமிழில் கையெழுத்து போட்டுள்ளார். பிரதிவாதிக்கு ஆங்கிலத்தில் கையெழுத்திடுவது தான் வழக்கம் என்று நிரூபிப்பதற்காக வா.சா.ஆ.1 ஏற்பட்ட 10.01.2014 தேதிக்கு முன்னதாக பிரதிவாதியால் ஏற்படுத்தப்பட்ட கிரைய பத்திரம், விடுதலை பத்திரம் மற்றும் அடைமான பைசல் ரசீது ஆகியவைகளில் பிரதிவாதி ஆங்கிலத்தில் கையெழுத்திட்டுள்ளதாக காட்டுவதற்கான ஆவணங்களில் தாக்கல் செய்வதற்காக வாதி தரப்பு சாட்சியம் திறவு செய்யப்பட வேண்டும் என்று வாதி தரப்பில் அனுமதி கோரப்பட்டுள்ளது. அதற்காக வாதி வா.சா1 விசாரிக்கப்பட வேண்டும் என்றும் மேற்கண்ட 20.09.2013 தேதியிட்ட கிரைய பத்திரம், 14.11.2019 தேதியிட்ட விடுதலை பத்திரம் மற்றும் 13.09.2013 தேதியிட்ட அடைமான பைசல் ரசீது ஆகியவைகள் சான்றாவணமாக பெற வேண்டும் என்றும் வாதி தரப்பில்

அனுமதி கோரப்பட்டுள்ளது.

12. மாண்புமிகு உச்ச நீதிமன்றம் Levaku Pedda Reddamma Vs. Gottumukkala Venkata Subbamma 2022 LiveLaw (SC) 533 என்ற வழக்கில் காலதாமதம் ஏற்பட்டாலும் கூடுதல் ஆவணங்களை வாங்க மறுப்பது நீதியை மறுப்பதற்கு சமம் என்று தீர்வு கண்டுள்ளதை கவனத்தில் கொண்டு மனுதாரர் தாக்கல் செய்துள்ள ஆவணங்களானது நீதியின் நலன் கருதி காலதாமதத்தை மன்னித்து பெறத்தக்கது என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது. ஆகவே, மேற்படி ஆவணத்தை வாதி தரப்பில் சாட்சியமாக தாக்கல் செய்வதற்கு வாதி தரப்பு சாட்சியத்தினை திறவு செய்ய வேண்டியது மற்றும் வா.சா.1ஐ சாட்சியமாக விசாரிக்க வேண்டியது அவசியம் என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

13. ஆகவே மனுதாரர் தாக்கல் செய்துள்ள மேற்படி மனுக்கள் அனுமதிக்கத்தக்கது என்றே இந்த நீதிமன்றம் கருதுகிறது. இருப்பினும் எதிர்மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள அலைக்கழிப்பு, செலவுத் தொகை செலுத்துவதன் மூலம் சரிக்கட்ட வேண்டும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. ஆகவே, செலவுத் தொகையுடன் மேற்கண்ட மனுக்கள் அனுமதிக்கத்தக்கது என்றே இந்த நீதிமன்றம் கருதுகிறது. அவ்வாறே தீர்வு காண்கிறது.

**IA.374/2023**

**முடிவாக,** இம்மனு செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர் எதிர்மனுதாரருக்கு செலவுத் தொகையாக ரூ.500/-ஐ வருகின்ற 27.09.2024 தேதிக்குள் செலுத்த உத்தரவிடப்படுகிறது. தவறும்பட்சத்தில் மனு தள்ளுபடி செய்யப்படும். அழைக்க வாய்தா 27.09.2024.

**IA.375/2023**

**முடிவாக,** இம்மனு செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர் எதிர்மனுதாரருக்கு செலவுத் தொகையாக ரூ.500/-ஐ வருகின்ற 27.09.2024 தேதிக்குள் செலுத்த உத்தரவிடப்படுகிறது. தவறும்பட்சத்தில் மனு தள்ளுபடி செய்யப்படும். அழைக்க வாய்தா 27.09.2024.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, சுருக்கெழுத்தரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் 25.09.2024 இன்று பகரப்பட்டது.

/ஒப்பம்/A.தமிழ்செல்வன்,
முதலாவது கூடுதல் சார்பு நீதிபதி,
விழுப்புரம்.

<u>**இணைப்பு :-**</u>

<u>**மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம் :-**</u>

(இல்லை)

<u>**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்**</u>

(இல்லை.)

/ஒப்பம்/A.தமிழ்செல்வன்,
முதலாவது கூடுதல் சார்பு நீதிபதி,
விழுப்புரம்.